# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2025/23 - 2017 ජුනි මස 28 වැනි බදාදා - 2017.06.28

*2025/23 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், கம்பஹா, அத்தனகல்லை- மினுவன்கொட குடிநீர் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதன் பொருட்டு நீர்ப்பாசன திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்படுகின்ற பஷ்நாகொட நீர்த்தேக்கத்தினால் மூழ்கடிக்கப்படக்கூடிய காணிப்பகுதிகளில் குடியிருக்கின்றவர்களை மீளக் குடியமர்த்துவதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொண்டு றுவன்வெல்ல பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல்*
*அமைச்சர்.*

*நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,*
*"லக்திய மெதுர",*
*இல. 35, புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2017, யூன் 07,*
*5/2/1/1288.*

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தில், றுவன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 101 சீ வஹகுல கிராம அலுவலர் பிரிவில், சனிகுறோப் வத்தை இலக்கம் 2 ஆம் பிரிவு என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 24 ஏக்கர், 39.3 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

| | | |
|---|---|---|
| *வடக்கு* | : | *சனிகுறோப் வத்தையின் மீதமாயுள்ள பகுதி ;* |
| *கிழக்கு* | : | *சனிகுறோப் வத்தையின் மீதமாயுள்ள பகுதி ;* |
| *தெற்கு* | : | *சனிகுறோப் வத்தையின் மீதமாயுள்ள பகுதி ;* |
| *மேற்கு* | : | *நீரோடை வழி (பஷ்நாகொட ஓயாவுடன் இணையும் துணை நீரோடை)* |

*காணிக்கு உரிமைகோருபவரின் பெயர் மற்றும் முகவரி:* 1. *பிரதம நிறைவேற்று அதிகாரி,*
*வரையறுக்கப்பட்ட மல்வத்த பெருந்தோட்ட நிறுவனம்,*
*இல. 280, டேம் வீதி,*
*கொழும்பு 12.*

*7 - 350*